1987 ஏப்ரல் 10]

நீலகிரி மாவட்டம், முதுமலை வனவிலங்கு சரணாலயம்.

314—(*வினா எண் 4709) திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள முதுமலை வனவிலங்கு சரணாலயத்தை இயற்கை அழகு குறையாமல் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலை வனவிலங்கு சரணாலயத்தைப் பாதுகாக்க தேவையான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. மத்திய அரசின் நிதி உதவியுடன், ஆண்டு தோறும் அங்கு பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இயற்கை எழிலைப் பாதிக்கும் எந்த வேலையும் அங்கு அனுமதிக்கப்படுவதில்லை. மரங்களை வெட்டுவது அடியோடு கைவிடப்பட்டுள்ளது.

நாகை நீலாட்சி அம்மன் ஆலயப் பணியாளர்கள்.

315—(*வினா எண் 5061) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை நீலாட்சி அம்மன் ஆலயப் பணியாளர்களுக்கு ஒரு வருட சம்பள பாக்கி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் அருள்மிகு நீலாட்சி அம்மன் ஆலயப் பணியாளர்கள் அனைவருக்கும் டிசம்பர் 1986 முடிய சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. பிற மாதங்களுக்குச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.